



செய்தி வெளியீடு எண். 48/2017 நாள்: 11.07.2017

**சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக போரூர் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கும் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் துவக்கி வைத்தார்கள்**

-----

சென்னை போரூர் ஏரியிலுள்ள நீரை சுத்திகரித்து சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக வழங்கும் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இன்று 11.07.2017 துவக்கி வைத்தார்கள்.

சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் நீர்மட்டம் மிக குறைந்த மழை பொழிவு காரணமாக முற்றிலும் வறண்டு விட்டது. இதனால் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு குறையாதவாறு தொடர்ந்து வழங்கிட கூடுதல் நீர் ஆதாரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. போரூர் ஏரியிலிருந்து சென்னை நகருக்கு குடிநீர் வழங்கிட ஏரி நீரின் தரம் சென்னை குடிநீர் வாரியம், கிண்டி கிங் இன்ஸ்டியுட் உள்ளிட்ட பரிசோதனை நிலையங்களில் பரிசோதிக்கப்பட்டது. இப்பரிசோதனைகளில் உரிய சுத்திகரிப்பிற்கு பின் இந்நீர் பயன்படுத்த உகந்தது என கண்டறியப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒரு குறைந்த திறன் கொண்ட மாதிரி சுத்திகரிப்பு நிலையத்திற்கான கருவிகள் தருவிக்கப்பட்டு உரிய சுத்திகரிப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகளின் முடிவுகள் அடிப்படையில் தினசரி 40 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பொது மக்களுக்கு விநியோகிக்க பணிகள் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இதற்காக ரூ.1.85 கோடி திட்ட மதிப்பீட்டில் 100 நாட்களுக்கு தினசரி 40 இலடசம் லிட்டர் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் 18.05.2017 அன்று துவக்கப்பட்டது.

இச்சுத்திகரிப்பு நிலையம் போரூர் ஏரியின் கரையில் 1080 சதுர அடியில் குறைந்த பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

போரூர் ஏரியின் மொத்த கொள்ளவு 5 கோடி கன அடி ஆகும். இதில் தற்போது 1 கோடி கனஅடி நீர் இருப்பு உள்ளது. தற்போதுள்ள நீர் இருப்பை பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 40 இலட்சம் லிட்டர் வீதம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சுத்திகரிப்பு நிலையத்தில்,

1. ஏரியிலிருந்து நீரேற்ற இரண்டு 50 குதிரை திறன் கொண்ட பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

2. நீரின் மாசு நீக்குவதற்காக மூன்று கட்டங்களில் வடிகட்டி கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் துகள்கள் நிரப்பப்பட்ட 12 உயர் அழுத்த கலன்களும் அடங்கும்.

3. உயர் அழுத்த கலன்களில் நிரப்பப்பட்டுள்ள வடிகட்டி துகள்கள் இஸ்ரேலிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

4. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்கொண்டு செல்ல 250 மில்லிமீட்டர் விட்டம் கொண்ட குழாய்கள் 300 மீட்டர் நீளத்திற்கு பதிக்கப்பட்டு போரூர் ஏரியின் அருகில் செல்லும் வீராணம் பிராதான குழாயில் இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணிகளும் நிறைவு பெற்று 11.07.2017ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டுள்ளது. இச்சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் நாளொன்றுக்கு 40 லட்சம் லிட்டர் குடிநீர் வீராணம் பிராதான குழாய் மூலம் போரூர் குடிநீர் விநியோக நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, வளசரவாக்கம், கே.கே.நகர், ஆலந்தூர் பகுதிவாழ் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் வறட்சி காலங்களில் மட்டுமன்றி நிரந்தரமாகவும் போரூர் ஏரியில் உள்ள நீரை பயன்படுத்தி, இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முன்னோடி திட்டமாக அமைக்கப்பட்டுளளது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸ்சான்டர் அவர்கள், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் அவர்கள், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் (பொ) திரு.கே.முத்து அவர்கள் மற்றும் பிற அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைக் குடிநீர்**